மே - 23

# TNPSC துளிகள்

- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகமானது “இந்தியாவில் தயாரிப்போம்” என்ற திட்டத்திற்கு ஊக்கமளிப்பதற்காக பாதுகாப்பு சார்ந்த 26 பொருட்களின் கொள்முதலுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - இது பொதுக் கொள்முதல் ஆணை, 2017 என்ற ஆணையின் மீதான ஒரு திருத்தத்தின் மூலம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- மே 19 ஆம் தேதியன்று தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி திருவள்ளூர் மாவட்டத்தின் பெரும்பாக்கத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியின் கட்டுமானத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
  - இந்தக் கட்டுமானப் பணிக்கான 60% நிதியானது மத்திய அரசினாலும் மீதம் உள்ள நிதியானது மாநில அரசினாலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
- தமிழ்நாடு சுகாதாரத் துறையானது சென்னையில் 3 நகராட்சி மண்டலங்களில் மிக அதிகம் பாதிக்கப்பட்ட 34 வார்டு பகுதிகளில் கோவிட் - 19 வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு தீவிர “நுண் திட்டத்தை” தொடங்கியுள்ளது.
- ஐரோப்பிய நாடான ஸ்லோவேகியா நாடானது கொரானா வைரஸ் தொற்றிலிருந்து குறைந்த எண்ணிக்கையிலான தனிநபர் தலா இறப்பு விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## கொனார்க் சூரியக் கோயில் - சூரிய நகரி திட்டம்

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகமானது ஒடிசாவில் உள்ள கொனார்க் சூரியக் கோயில் மற்றும் கொனார்க் நகரம் முழுவதையும் சூரிய ஒளி ஆற்றலில் இயங்கும் தன்மையுடையதாக ஆக்கியுள்ளது.
- இது 13வது நூற்றாண்டில் கங்கை வம்சத்தின் தலைசிறந்த ஆட்சியாளரான முதலாம் நரசிம்மதேவரால் கட்டப் பட்டுள்ளது.
- இதன் இருண்ட (கருப்பு) வண்ணத்தின் காரணமாக இந்தக் கோயில் “கருப்பு பகோடா” என்று அழைக்கப் படுகின்றது.
- இதே போன்று பூரி ஜெகன்நாத் கோயில் “வெள்ளைப் பகோடா” என்று அழைக்கப் படுகின்றது.
- கொனார்க் ஆனது ஒடிசாவின் தங்க முக்கோணத்தின் மூன்றாவது தொடர் இணைப்பாகும்.
- முதலாவது தொடர் இணைப்பு பூரி ஜெகன்நாத் மற்றும் இரண்டாவது தொடர்

இணைப்பு புவனேஸ்வர் (ஒடிசாவின் தலைநகரம்) ஆகும்.

❖ இந்தக் கோயிலானது 1984 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.

❖ இந்தக் கோயிலானது கலிங்கா கட்டிடக்கலை மற்றும் அதன் பாரம்பரியத்தை வடிவமைத்து அமைக்கப்பட்டுள்ளது.

❖ இங்கு ஒவ்வொரு ஆண்டும் சந்திரபாகா மேளா நடத்தப் படுகின்றது.



# பொருளாதாரச் செய்திகள்

**FME**

❖ அகில இந்திய அளவில் அமைப்புசாரா தொழிற்துறைக்காக "நுண் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிற் நிறுவனங்களின் உருவாக்கத்திற்கான திட்டம் (FME - Formalization of Micro food processing Enterprises)" என்ற மத்திய அரசினால் ஆதரிக்கப்படும் ஒரு புதிய திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை வழங்கியுள்ளது

❖ இது இலட்சிய நோக்கு மாவட்டங்களில் தற்பொழுது இருக்கும் நுண் உணவுப் பதப்படுத்தல் தொழில்முனைவோர்கள், மகளிர் தொழில்முனைவோர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் ஆகியோரால் வாங்கப்படும் கடன் அணுகுதலை அதிகரிக்க உதவுகின்றது.

❖ இது தொகுப்பு ரீதியான ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றது. இது அழுகிப் போகும் உணவுப் பொருட்கள் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.

❖ இது 5 ஆண்டு காலத்திற்கு, அதாவது 2020-21லிருந்து 2024-25 வரையிலான காலகட்டத்திற்குச் செயல்படுத்தப்பட இருக்கின்றது.

❖ இது மத்திய அரசினால் ஆதரிக்கப்படும் ஒரு திட்டமாகும்.

❖ இதற்கான செலவினமானது மத்திய அரசு மற்றும் மாநில அரசினால் 60 : 40 என்ற

அளவில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.




## ECLGS


- சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் முத்ரா திட்டத்தின் கீழ் கடன் வாங்குபவர்கள் ஆகியோருக்காக அவசரகால கடன் தொடர் உறுதித் திட்டத்திற்கு (ECLGS - Emergency Credit Line Guarantee Scheme) மத்திய அரசு தனது ஒப்புதலை வழங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், தகுதியுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் விருப்பமுள்ள முத்ரா கடன் வாங்குபவர்கள் ஆகியோருக்கு ரூ.3 இலட்சம் கோடி அளவிலான கூடுதல் கடனிற்காக 100% கடன் உத்தரவாதமானது தேசியக் கடன் உத்தரவாத அறக்கட்டளை நிறுவனத்தினால் வழங்கப் படுகின்றது.

## பிரதான் மந்திரி மத்சய சம்பாதா யோஜனா

- இந்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு தனது ஒப்புதலை வழங்கி

உள்ளது.

- இது நீலப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டமாகும்.
- இது அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு, அதாவது 2020-21 நிதியாண்டிலிருந்து 2024-25 ஆம் நிதியாண்டு வரையிலான காலத்திற்குச் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- மத்திய மீன்வள, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத் துறை அமைச்சகமானது இதனைச் செயல்படுத்தும் அமைப்பாகும்.




- இது மத்திய அரசுத் திட்டம் (CS - Central Sector Scheme) மற்றும் மத்திய அரசினால் ஆதரிக்கப்படும் திட்டம் (CSS - Centrally Sponsored Scheme) ஆகிய 2 கூறுகளின் மூலம் செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- மத்திய அரசுத் திட்டம் (CS) - முழுத் திட்டத்திற்கான செலவும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் (100% மத்திய அரசு நிதியுதவி).
- CSS கூறானது பயனாளியைச் சாராத மற்றும் பயனாளியைச் சார்ந்த என்ற 2 துணைக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- இதன் கீழ், முழுத் திட்டத்திற்கான செலவினமும் மத்திய மற்றும் மாநில அரசினால் பயனாளியைச் சாராத துணைக் கூறின் அடிப்படையில் பின்வருமாறு பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.
    - வட கிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்கள் - 90% மத்திய அரசினாலும் 10% மாநில அரசினாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.
    - இதர மாநிலங்கள் - 60% மத்திய அரசினாலும் 40% மாநில அரசினாலும் பகிர்ந்து கொள்ளப் படுகின்றது.
    - ஒன்றியப் பிரதேசங்கள் (சட்டமன்றம் கொண்டுள்ளவை மற்றும் சட்டமன்றம்

இல்லாதவை) - 100% நிதி மத்திய அரசினால் அளிக்கப்படுகின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அகாப்பே சித்திர மாக்னா

- இது கோவிட் - 19 நோய்த் தொற்று கண்டறிதலின்போது பயன்படுத்தப்படும் காந்த நானோ துகளை அடிப்படையாகக் கொண்ட ஆர்என்ஏ பிரிப்பு உபகரணமாகும்.
- இது கொச்சினில் உள்ள அகாப்பே நோய் கண்டறிதல் நிறுவனத்துடன் இணைந்து ஸ்ரீ சித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்த உபகரணமானது சார்ஸ் - COV2 நோய்த் தொற்றினைக் கண்டறிவதற்காக ஆர்டி-எல்ஏஎம்பி, ஆர்டி-க்யூபிசிஆர், ஆர்டி-பிசிஆர், இதர வெப்பமானிகள், பிசிஆர் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நெறிமுறைகளுக்கு ஆர்என்ஏ பிரிப்பிற்காக வேண்டி பயன்படுத்த முடியும்.

# மாநிலச் செய்திகள்

## பெங்களூருவில் மிகப்பெரிய அளவில் ஏற்பட்ட ஒலி

- ஒலி அதிகரிப்பானது ஒரு பொருள் காற்றில் ஒலியின் வேகத்தை விட அதிக வேகத்தில் செல்லும் போது நிகழ்கின்றது. அப்பொழுது இது அதிர்வு அலைகளை உருவாக்குகின்றது.
- ஒரு விமானம் குறைந்த உயரத்தில் பறந்தால், அதன் மூலம் ஏற்படும் ஒலி அதிகரிப்பானது நிலநடுக்கம் மற்றும் கண்ணாடி உடைதல் போன்ற அதிர்வுகளுக்கு வழிவகுக்கும்.

# முக்கிய தினங்கள்

## உரையாடல் மற்றும் வளர்ச்சிக்கான கலாச்சாரப் பன்முகத் தன்மைக்கான உலக தினம்

- இது பன்முகத் தன்மை சார்ந்த விவகாரங்களை ஊக்குவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு சர்வதேச விடுமுறையாகும்.
- இது 2001 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் பாமியானில் புத்தர் சிலைகள் உடைக்கப் பட்டதன் விளைவாக ஏற்படுத்தப் பட்டது.

## முதலாவது சர்வதேச தேயிலை தினம் - மே 21

- இந்தியாவின் தொடர் முயற்சிகளின் காரணமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மே 21 ஆம் தேதியை “சர்வதேச தேயிலை தினமாக” அறிவிப்பது குறித்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் 2019 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- சீனாவிற்குப் பிறகு தேயிலையை அதிகளவில் உற்பத்தி செய்யும் இரண்டாவது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.
- இந்தியா உலகின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 23%ஐக் கொண்டுள்ளது.
- மேலும் கருப்புத் தேயிலையை உற்பத்தி செய்து அதனை நுகரும் உலகின் மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.




## தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் - மே 21

- இத்தினமானது 1991 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட இந்தியாவின் முன்னாள் பிரதமரான இராஜீவ் காந்தியின் நினைவு தினத்தை அனுசரிப்பதற்காக இந்தியாவில் மே 21 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- இது அதிகரித்து வரும் தீவிரவாதம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி அனுசரிக்கப்படுகின்றது. எனவே இதன்மூலம் குடிமக்கள் தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுக்க முடியும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★